**பண்டாரவளை மாநகர சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 12 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதியும் முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பண்டாரவளை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 54 ஏக்கர் 1 றூட் 13.58 பேர்ச் ஆக உள்ள 50 காணித்துண்டுகளுக்கு பெறுமதி விலைமதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டம். | விலை மதிப்பீடு செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கின்றேன். மற்றும் எதிர்வரும் காலத்தில் இப்பெறுமதி 2020 இல் கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | சபைக்கு சொந்தமான கலிபவுசர் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபைக்கு சொந்தமான 06 வாகனங்களின் பெறுமதி விலைமதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 11,076,130 பெறுமதியான கேள்வி வைப்புக்கள், ரூபா 15,220,915 பெறுமதியான வருமான வைப்புக்கள், மற்றும் ரூபா 1,566,455 பெறுமதியான ஒப்பந்த வைப்புக்கள் தேவையான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வைப்பு பதிவேடு சரியான முறையில் பயன்படுத்தவும் கணக்குகளுடன் சரியான இணைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொது வைப்பு பதிவேடு பிரதி அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | சபைக்கு சொந்தமான கலிபவுசர் எடுப்பதற்கு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியில் எடுக்கப்பட்டு நிதிக்கூற்றில் செலுத்த வேண்டிய கடனாக காட்டப்பட்ட ரூபா 1,040,000 பெறுமதியான கடன் மீதியை உறுதிப்படுத்த தேவையான ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களுக்கு அந்த கடன் மீதிகள் கடன் பதிவேடு மூலமாக எடுக்கப்பட உள்ளன. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | அத்தியாயம் XXIV பிரிவு 4 | வேலையை விடும் போது 13 ஊழியர்களிடம் அறவிட வேண்டிய ரூபா 1,006,234 மற்றும் ஓய்வு பெற்ற 4 அலுவலர்களிடம் அறவிட வேண்டிய ரூபா 251,249 கடன் மீதிகள் அறவிடப்படவில்லை. | நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். | சகல கடன் மீதிகள் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமானம் 104 | மீளாய்வாண்டில் 2 வாகன விபத்து தொடர்பபாக ஆரம்ப அறிக்கை மற்றம் முழு இறுதி அறிக்கை வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமானங் களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு வாகனம் தொடர்பாக நிதிமன்ற வழக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. மற்றும் வாகனம் சம்மந்தமாக கிடைத்த இறுதி அறிக்கைப்படி நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நிப் பிரமானம் 396 | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு வழங்கப்பட்டு 06 மாதத்திற்கு மேலாக கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 26,083 பெறுமதியான காசோலை சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமானங் களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழங்கப்பட்டு கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை சம்மந்தமாக வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | நிதிப் பிரமானம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 10 எண்ணிக்கையான ஒப்பந்த பிடிபணங்கள் ரூபா 558,757 தொடர்பாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானங் களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உறுதிச் சிட்டைகள் பார்த்து அதன்படி கொடுப்பனவு ஆடையாளம் இனங்கண்டு பொதுவைப்பு கணக்கில் பதிவளிப்பு செய்யவும் மற்றும் கடந்த வருடம் வைப்பு செய்யப்பட்ட விடயங்கள் மீளவும் பரீசிலித்து திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 5 வருடத்திற்கு ஒரு தடவை விலைமதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 770 கடைகளிற்கு விலை மதிப்பீடு செய்யாது ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | சரியான விலைமதிப்பீடு செய்து வரி அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,593,369 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,974,078 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 24,947,000 | 31,297,352 | 20,036,759 | 11,260,593 | 23,235,000 | 27,138,140 | 26,003,881 | 1,134,259 |
| (ii) | வாடகைகள் | 31,439,000 | 42,118,242 | 29,487,998 | 12,630,244 | 30,162,000 | 48,900,730 | 40,360,002 | 8,540,728 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,265,000 | 8,915,655 | 8,915,655 | - | 8,314,000 | 9,812,705 | 9,812,705 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 229,133,000 | 11,908,357 | 208,035,652 | - | 28,991,000 | 51,701,653 | 40,783,444 | 10,918,209 |
| | மொத்தம் | 294,784,000 | 94,239,606 | 266,476,064 | 23,890,837 | 90,702,000 | 137,553,228 | 116,960,032 | 20,593,196 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேலாக காணப்பட்ட நிலுவை ஆதனவரி ரூபா 11,705,360 மற்றும் நிலுவை ஏனைய வருமானம் ரூபா 127,232,756 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | தற்போது நிலுவை ஆதனவரி ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. மீதி நிலுவை வருமானம் அறவிடுவதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,083,558 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 11,010,300 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | இவ் வருமானத்தை தீர்ப்பனவு செய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**2.2.4 ஆதனவரி மற்றும் வரிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்படாத மொத்த நிலுவை ஆதனவரி மற்றும் வரி வருமானம் ரூபா 19,682,211 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | தற்போது நிலுவை ஆதனவரியில் இருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. மீதி அறவிட சட்டப்படி நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.5 வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்படாத மொத்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 29,183,800 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | தற்போது நிலுவை வாடகையில் இருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. மீதி அறவிட சட்டப்படி நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டுடன் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் பொது வீதி அபிவிருத்தி மற்றும் திருத்தம் சம்மந்தமாக தேவையான செயற்பாடு அதனுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் வருடத்தில் இருந்து விரிவான தகவல் உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | சுகாதார வசதிகள் இல்லாத மக்களுக்கான அவ் வசதிகள் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்கின்றோம். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பொருளாதார மத்திய நிலையம் மற்றும் வியாபார கடைத் தொகுதியில் 06 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும் போது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகைக்கு கொடுக்கப்படும் போது ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். | தேவையான கோவைகளை பரீட்சித்து ஒப்பந்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது மலசலகூடம் நடாத்துபவர்களிடம் அறவிட வேண்டிய ரூபா 255,667 நிலுவை வரி வருமானம் அறவிடப்படவில்லை. | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | வாடகைக்கு எடுத்து நடாத்துபவரின் வைப்பில் இருந்து நிலுவை வருமானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 12 இருப்பு வகைகள் தொடர்பான ரூபா 37,144 குறைவடைந்துள்ளது. மற்றும் 09 இருப்பு வகைகள் சம்மந்தமாக ரூபா 43,985 கூடுதலாக உள்ளதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர் வரும் வருடத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ஈ) | 2 வருடத்திற்கு மேலாக அசையாத இருப்பாக காணப்படும் ரூபா 238,156 பெறுமதியில் வாகன உதிரிப் பாகங்கள், மின் இணைப்பு உதிரிப்பாகங்கள், மற்றும் மின்சார உதிரிப்பாகங்கள் மொத்தமாக 18 வகைகள் சம்மந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைகளை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும்.. | அவசர தேவைக்கு தேவையான பொருட்கள் களஞ்சியத்தில் வைத்திருக்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 05 பதவிகள் தொடர்பாக 09 அலுவலர்கள் அதிகமாகவும் 22 பதவிக்கு 68 அலுவலர்கள் குறைவாகவும் உள்ளனர். | பதவிகள் சரி செய்யப்பட வேண்டும். | மேலதிகமான பதவிக்கு அனுமதி எடுக்க நடவடிக்கை எடுக்கின்றோம். குறைபாடு சம்மந்தமாக ஊவா மாகாண பிரதம செயலருக்கும் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும் அறிவுறுத்தல் கொடுத்துள்ளோம். மற்றும் ஆணையாளர் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களுக்கு அனுமதி கேட்டுக் கொண்டிருக்கின்றோம். |
| (ஆ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய இலக்கம் 25/2014 ஆகிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 7 வது பந்திப் பிரகாரம் முகாமை சேவை திணைக்களத்தின் அனுமதி எடுக்காமல் சுகாதார மற்றும் ஏனைய தொழிலாளர்கள் 17 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு ரூபா 549,474 சம்பளம் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றுநிருப அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதிக்கப்பட்ட பதவிகள் நிலையில் உள்ள வெற்றிடம் நிரப்புவதற்கு ஊவா மாகாண பிரதி பிரதம செயலாளரிடம் (தளிப்பட்ட பயிற்சி) இருந்து அனுமதி கிடைத்துள்ளது. |

## 3.4 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான பயன்பாடற்ற 21 வாகனங்கள் உள்ளது. | திருத்தம் செய்து பயன்படுத்த அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்கள் மட்டும் திருத்தம் செய்யவில்லை. |

## 3.5 வருடாந்த இருப்புக் கணிப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு தொடர்பாக செய்யப்பட்ட வருடாந்த இருப்பு கணிப்பு சபை அறிக்கையின் படி பெறுமதி குறிப்பிடப்படாத 10 பொருள் வகைகள் தொடர்பாக 505 அலகுகள் குறைவாகவும் மற்றும் இருப்புக்கு எடுக்காத 27 சொத்து தொடர்பாக 219 அலகுகள் உள்ளன. | குறைவு மற்றும் மேலதிகம் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டுடன் சம்மந்தமாக செய்யப்பட்ட வருடாந்த இருப்பு கணிப்பு சபை அறிக்கை கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைத்தமையினால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.எதிர்வரும் வருடத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்படவில்லை. | ஒரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்படவில்லை. |